# செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

# தமிழ்த்துறை

## கையேடு

## 2021-2022



# நமது கல்லூரி

**கல்லூரியின் பெயர்: செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**முகவரி** : மூக்கண்டப்பள்ளி,சிப்காட், ஓசூர்- 635126 கிருஷ்ணகிரி(மாவட்டம்).

**தொடர்பு எண்** : 04344-274453, 9894905338, 9952617242

**தொலை நகல் எண்** : 04344-274453

**மின்னஞ்சல்** : stjoseph.college10@gmail.com

**இணையம்** : www.stjosephcollege.edu.in

**முதல்வர்** : **அருட்சகோதரி முனைவர் ஆரோக்கிய ராணி M.sc., M. Phil.PGDCA., Ph. D.,**

**கல்லூரி நிறுவப்பட்ட ஆண்டு:** 2006 ஆம் ஆண்டு செயின்ட் ஜோசப் பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி கிருஷ்ணகிரி மாவட்டம் சிப்காட்,ஓசூர் மூக்கண்டப்பள்ளியில் நிறுவப்பட்டுள்ளது. மற்றும் பிரான்சிஸ்கன் காணிக்கை அன்னை சபை சகோதரிகளால் நிர்வகிக்கப்பட்டுவருகிறது. இக்கல்லூரியானது சேலத்தில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு 25 அக்டோபர் 2006 முதல் செயல்படத் தொடங்கியது. கல்லூரியில் அனைத்து சாதி மற்றும் மதத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்க்கப்பட்டு வருகிறது. தங்கும் விடுதி மற்றும் பேருந்து வசதிகள் உள்ளன. கல்லூரி மற்றும் விடுதியில் சேர்க்கைக்கான விண்ணப்பம் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

**பொன்மொழி**

அறிவு தூய்மைப்படுத்துகிறது

அறத்தை மேம்படுத்துகிறது

**பார்வை**

பொறுப்புள்ள குடியுரிமையும் பயனுள்ள அறிவுச்சார்ந்த சமூகத்தையும் சுற்றுச்சூழலுக்கேற்ப மாற்றங்களை ஊக்குவிக்கும் தார்மீக விழுமியங்களால் வலுப்படுத்தப்பட்ட ஒரு மாறும் கற்றல் சமூகத்தை உருவாக்குவதற்கான பார்வை.

**பணி**

- புதுமையான கல்வியை வழங்குதல்
- அறிவுச்சார்ந்த தனிப்பட்ட மற்றும் ஆன்மிக வளர்ச்சியை வளர்த்தல்
- சமூகப் பொறுப்பை ஊக்குவித்தல்
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்த்தல்



துறைத்தலைவர் முனைவர் பு.எழிலரசி **M.A.,** M.Phil.,B.Ed.,Ph.D.,Set.,

துறைப்பேராசிரியர்கள்

திருமதி சி.ஹேமலதா **M.A., M.Phil.,B.Ed.,Set.,(Ph.D)**

திருமதி ஈ.கவிதா **M.A., M.Phil.,(Ph.D)**

திருமதி ந.கனிமொழி **M.A., B.Ed., M.Phil.,NET.,**

முனைவர் பெ. சங்குவதி **M.A.,NET., Set., M.Phil. Ph.D.**

முனைவர் சே.கீதா **M.A., M.Phil., Ph.D.**

# செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, ஓசூர்.

## தமிழ்த் துறை கையேடு – 2021-2022

"தமிழை என் உயிரென்பேன் கண்டீர்

உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே"

அகத்தியர் தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாக 13.09.2021 அன்று பாரதியார் நூற்றாண்டு விழா இறை வணக்கத்துடன் இனிதே துவங்கியது. திருமதி.சி.ஹேமலதா தமிழ்த்துறை அவர்கள் வரவேற்புரை கூற, கல்லூரியின் முதல்வர் முனைவர் அருட்சகோதரி ஆரோக்கிய ராணி, மற்றும் செயலர் அருட்சகோதரி நிம்.ஃ.பா அவர்கள் வாழ்த்துரை வழங்க, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பு.எழிலரசி முன்னிலை வகித்தார். இவ்விழாவில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்துக் கொண்டனர்.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக முனைவர். கருமலைத் தமிழாழன் ஓசூர் தமிழ்ச்சங்க செயலாளர், மாநில மதிப்பியல் தலைவர், தமிழக தமிழாசிரியர் கழகம், ஓசூர் அவர்களும் மற்றும் திரு.இராசு அவர்களும் கலந்துக் கொண்டு மாணவிகளுக்கு பாரதியார் பற்றியும் பெண்களின் முன்னேற்றம் குறித்தும் சிறப்புரையாற்றினர். பின்னர், இவ்விழாவில் பேச்சுப் போட்டி மற்றும் பாட்டுப் போட்டி நடத்தி, வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர், கல்லூரியின் முதல்வர் மற்றும் துறைத் தலைவர் பரிசுகளை வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியின் இறுதியாக நன்றியுரையை முனைவர்.பெ.சங்குவதி வழங்க தேசிய கீதத்துடன் இவ்விழா இனிதே நிறைவடைந்தது.







**போட்டிகள்**

**பாட்டுபோட்டி**

முதல் பரிசு :கிரண்மைய் (வேதியியல் துறை)

இரண்டாம் பரிசு :ஐடா டோரதி (ஆங்கிலத்துறை)

மூன்றாம் பரிசு :அனுஷா(வேதியியல் துறை)

**பேச்சுப்போட்டி**

முதல் பரிசு :ஸ்ரீ சண்முக சுந்தரி(வேதியியல் துறை)

இரண்டாம் பரிசு :பவித்ரா (ஆங்கிலத்துறை)

மூன்றாம் பரிசு :சந்தியா(வேதியியல் துறை)

## பிற கல்லூரி சார்ந்தப் போட்டிகள்

## அரசு ஆடவர் கல்லூரி .கிருஷ்ணகிரி.

காந்தி ஜெயந்தி முன்னிட்டு அக்டோபர் 2இல் பேச்சுப்போட்டி நடைப்பெற்றது. இப்போட்டியில் எம் கல்லூரி வேதியியல் துறையைச் சேர்ந்த மாணவி ஸ்ரீ சண்முக சுந்தரி கலந்துக்கொண்டு இரண்டாம் பரிசு பெற்றார்.

72 ஆம் ஆண்டு குடியரசு தினவிழாவை முன்னிட்டு பிப்ரவரி 28ஆம் நாளன்று நடைப்பெற்ற பேச்சுப்போட்டி மற்றும் பாட்டுபோட்டிகளில் வேதியியல் துறையைச் சேர்ந்த மாணவி ஸ்ரீ சண்முக சுந்தரி மற்றும் கிரண்மைய் ஆகியோர்கலந்துக்கொண்டு இரண்டாம் பரிசு பெற்றனர்.



மாவட்ட மைய நூலகத்தில்

பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கான போட்டி

கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு, சான்றிதழ் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி, மார்ச்.20: கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகத்தில் தமிழியக்கம் சார்பில், தமிழர் திருநாள் கட்டுரை, கவிதை, பாட்டு, பேச்சு போட்டிகள் நேற்று நடத்தப்பட்டது. மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு பள்ளி, கல்லூரிகளில் இருந்து 100க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மாவட்ட நூலக அலுவலர் பிரேமா தலைமை வகித்தார். தமிழியக்க மாநில இலக்கிய அணி ஒருங்கிணைப்பாளர் கருமலைத்தமிழாழன், கலைச்செல்வி, தனலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். போட்டியின் நடுவர்களாக அஞ்சல்துறை (ஓய்வு) சர்வேஸ்வரய்யா, வானவில் பன்னீர்செல்வம், மகளிர் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள் கவிதா, ரேவதி, குமார், மகேஸ்வரி அஷ்ரப், ஜெயபாரதி ஆகியோர் பங்கேற்று போட்டிகளை நடத்தினர்.

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து கலந்துகொண்ட மாணவர்கள் தமிழ் மொழியின் தொன்மை குறித்தும், சிறப்புகள் குறித்தும் பேசினர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேலும் மாவட்ட அளவில் வெற்றிபெற்ற மாணவர்கள், மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பார்கள் என நூலக அலுவலர் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் தமிழியக்க மாவட்ட செயலாளர் ராசு, பொறுப்பாளர்கள் பாலகிருஷ்ணன், பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போச்சம்பள்ளி



**தமிழ்ச்சங்கம், ஓசூர்**

மார்ச் 17அன்று ஓசூர் தமிழ் சங்கத்தின் சார்பாக நடைப்பெற்ற மாவட்ட அளவிலான போட்டிகளில் எம் கல்லூரியின் வேதியியல் துறையைச் சேர்ந்த மாணவிகளான ஸ்ரீ சண்முக சுந்தரி பேச்சுப்போட்டியில் முதல் பரிசும் கிரண்மைய் கவிதைப்போட்டியில் இரண்டாம் பரிசும் மா.ஜீவிதா கட்டுரைப்போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றனர்.



**ஜே.சி. ஐ**

மார்ச் 17அன்று ஜே.சி. ஐ சார்பாக மகாபாரதத்தில் தர்மசங்கடங்கள் என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடைப்பெற்றது. இப்போட்டியில் எம் கல்லூரியைச் சேர்ந்த ஆங்கிலத்துறை மாணவி பவித்ரா முதல் பரிசும் வணிகவியல் துறை த்ரிஷா மூன்றாம் பரிசும் ஆங்கிலத்துறை ஐடா டோரதி ஆறுதல் பரிசும் பெற்றனர்.




